DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. O.S.No.194/2022

Prosecution witness for P.W. 3

| | | | |
|---|---|---|---|
| Name | ...திருமதி. குருபாக்கியம் | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | ... |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **27.06.2024.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் திசையன்விளை சார்பதிவாளர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். கொம்மடிக்கோட்டை சார்பதிவாளருக்காக வரப்பெற்ற அழைப்பாணையின்பேரில் அவரது உத்தரவுப்படி அவருக்காக சாட்சியமளிக்க வந்துள்ளேன். அதற்காக அவர் வழங்கிய அதிகார கடிதத்தினை தாக்கல் செய்கிறேன் அது சா.சா.ஆ–1, என்னுடைய அடையாள அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் தாக்கல் செய்கிறேன் அது சா.சா.ஆ–2 (அசல் ஆவணம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது), அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ளபடி 23.03.2000 தேதியிட்ட தங்கதுரை நாடார் என்பவர் அவரது பேரன் அர்ஜுன் பெரியசாமி மற்றும் ஆகாஷ் கண்ணன் ஆகியோர்களுக்கு எழுதி வைத்த உயில் ஆவணத்தினை கொண்டு வந்துள்ளேன். அந்த ஆவணத்தின் அசலை கொண்டுவந்துள்ளேன். அந்த ஆவணத்தின் உண்மை நகலை தாக்கல் செய்கிறேன். அது சா.சா.ஆ. 3 அந்த உயில் ஆவணத்தில் சாட்சியாகவும், இன்னாரென்று நிரூபித்த சாட்சிகளாகவும் தனபால் சுப்பிரமணியன், மற்றும் வேல்சுந்தரம் ஆகியோர்கள் சாட்சி கையொப்பமிட்டுள்ளனர்.